# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, சாந்த சிறுவர் கல்விச் சேவைகள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2007, யூன் மாதம் 22 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 9.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2007 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, சாந்த சிறுவர் கல்விச் சேவைகள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2007 ஆம் ஆண்டு யுன் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.*]

*ச.வ.ஒ. (கூட்.) 19/2004*

**சாந்த சிறுவர் கல்விச் சேவைகள் நிறுவகத்தைக் கூட்டிணைப் பதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை.*

"சாந்த சிறுவர் கல்விச் சேவைகள் நிறுவகம்" என அழைக்கப் படுவதும் அறியப்படுவதுமான நிறுவகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவகத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக் கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக்கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டி ருந்ததாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ள தாதலாலும் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ள தாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, சாந்த சிறுவர் கல்விச் சேவைகள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*சாந்த சிறுவர் கல்விச் சேவைகள் நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் தற்போது சொல்லப்பட்ட சாந்த சிறுவர் கல்விச் சேவைகள் நிறுவ கத்தின் (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப் படும்) உறுப்பினர்களாக உள்ளவர்களும், உறுப்பினர்களாக இனி மேல் சேர்த்துக்கெள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் "சாந்த சிறுவர் கல்விச் சேவைகள் நிறுவகம்" என்னும் பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத் தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்க லாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அதற்கு முழுத்தத்துவமும் அதிகாரமும் இருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** எந்தப் பொதுக் குறிக்கோள்களுக்காக கூட்டுத்தாபனம் தாபிக்கப்படுகின்றதோ அந்தப் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) பாடசாலைச் சூழலுடன் சிறுவர்களை பரிச்சயப்படுத்தும் நோக்குடன் முன்னிலைப் பாடசாலைகளைத் தாபித்தல்;

(ஆ) கிராமிய மற்றும் நகர இடப்பரப்புகளின் வறிய மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குதல் ;

(இ) சிறுவர்களின் உடல் மற்றும் உளவள வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு சிறுவர் பூங்காக்களைத் தாபித்தல்;

(ஈ) தூர இடப்பரப்புகளில் அமைந்துள்ள சாதன வசதிகள் குறைவாயுள்ள பாடசாலைகளுக்கு பொது வசதிகளையும் கல்விச் சாதனங்களையும் வழங்குதல் ;

(உ) குறைவான மருத்துவ வசதிகள் காணப்படும் இடப்பரப்புகளில் வாழுகின்ற சிறுவர்களுக்கு மருத்துவக் கூடங்கள் ஊடாக மருத்துவ வசதிகளை ஏற்பாடு செய்தல்.

ஆயினும் எவ்வாறாயினும் (அ), (ஆ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளில் ஏற்பாடுகள் மாகாணக் கல்விப் பணிப்பாளர், பிரதேசக் கல்விப் பணிப்பாளர், பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் மற்றும் தவிசாளரின் அல்லது அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரின் மேற்பார்வைக்கு அமைய மட்டுமே பயனளிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கீழ்க்காணும் தத்துவங்களைக் கூட்டுத்தாபனம் கொண்டதாயிருத்தல் வேண்டும் :—

(அ) இலங்கையில் அல்லது வெளிநாடுகளிலுள்ள ஆட்களிடமிருந்து மானியக் கொடைகளையும் கொடைகளையும் நன்கொடைகளையும் பெற்றுக்கொள்ளுதலும் சேகரித்தலும் ;

(ஆ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுக்கவும் அல்லது கொடுக்கவும் ஈடுவைக்கவும் அல்லது விற்பனை செய்யவும் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காக மானியக் கொடை, அறக்கொடை அல்லது கடன்களை வழங்குதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கும், தொழிலுக்கு அமர்த்தவும், ஊதியம் வழங்குவதற்கும் மற்றும் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கும் ;

(உ) ஏதேனும் வங்கி அல்லது எவையேனும் வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு மற்றும் வைப்புக் கணக்குகளை ஆரம்பிக்கவும், மூடவும் பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி கடன் பெறவும் அல்லது பணம் திரட்டவும் ;

(ஊ) முகாமைத்துவக் குழுவினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய பிணைகளில் கூட்டுத்தாபனத்தின் நிதியங்களை முதலீடு செய்தல் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு இடைநேர்விளைவானவையான அல்லது உகந்தனவான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபனமானது அதனது வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களையும் பற்றித் தகுந்த கணக்குகள் வைத்திருக்கப்படச் செய்வித்தல் வேண்டும். கணக்குகளும் கணக்காய்வும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் முகாமைத்துவக் குழுவினால் நியமிக்கப்பட்ட தகைமைவாய்ந்த கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**6.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இச்சட்டத்தினதும் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளினதும் ஏற்பாடுகளுக்கமைய பின்வரும் பதினொரு உறுப்பினர்களைக் கொண்ட முகாமைக் குழு ஒன்றினால் நிர்வகிக்கப்பட வேண்டும் :—

(அ) கௌரவ தலைவர், கௌரவ துணைத் தலைவர், பொதுச் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ; அத்துடன்

(ஆ) அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு இணங்க ஆறு உறுப்பினர்கள்,

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக் குழுவானது இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடனடுத்து நேர்முந்திய நாளன்று பதவி வகித்த மன்றத்தின் முகாமைக் குழுவின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7.** (1) காலத்துக்குக்காலம் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் மூன்றில் இரண்டிற்குக் குறையாத உறுப்பினர்களின் வாக்குகளைக் கொண்டு பின்வரும் கருமங்களுக்கு இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாயிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(அ) உறுப்பாண்மைக்கு உறுப்பினர்களைச் சேர்த்தலும், விலக்குதலும், விலக்கப்படுதலும் அல்லது உறுப்பாண்மைக்கு செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள் ;

(ஆ) முகாமைக் குழுவின் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும் அவர்களது தத்துவங்களும் கடமைகளும் ;

(இ) கூட்டுத்தாபன அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களது கடமைகளும் பணிகளும் ;

(ஈ) முகாமைக் குழுவின் கூட்டங்களைக் கூட்டுவதிலும் நடாத்துவதிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையும் அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை கொண்டு நடாத்துதலும் ;

(2) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் அப் போதைக்கு வலுவிலிருக்கும் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந் தோராதல் வேண்டும்.

கலைப்பின்மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.

**8**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் திருப்தி செய்ததன் பின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தா பனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. அத்தகைய ஆதனங்கள் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை யொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அத்துடன் எந்த நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன் அல்லது அவற்றின் உறுப்பின ரிடையே வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதி லிருந்து அதன் விதிகளால் தடைசெய்யப்பட்டுள்ளதோ அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படலாம் அல் லது கைமாற்றப்படலாம்.

நிறுவகத்திடமிருந்து வருமதியாக உள்ளனவும் அதற்குச் செலுத்தப் படற்பாலனவையு மான கடன்கள்.

**9**. இச்சட்டம் நடைமுறைக்குவரும் தினத்தில் நிறுவனத்துக் குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப் படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் நிறுவகத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்பாலதான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத் தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம் என்பது.

**10**. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக் கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றல் உடையதாதலும் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங் களும், அவற்றை விற்க, ஈடுவைக்க குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுமுள்ள முழுத்

தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது முகாமைத்துவக் குழுவின் கட்டுக்காவலில் வைத்திருக்கப்படுதலுடன் தலைவர் மற்றும் முகாமைத்துவக் குழுவின் இரு வேறு உறுப்பினர்கள் முன்னிலையில் தவிர எத்தன்மைத்தான ஏதேனும் சாதனத்திலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கையொப்பமிடுதல் சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாகவிருத்தல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ பதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தின் தமிழ், சிங்கள உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படின், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, பொல்ஹேன்கொடை வீதி, கிருளபனை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*